©
தமிழ்நாடு அரசு
2017

பதிவெண்: எம்.

# திருவள்ளூர் மாவட்ட அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது

திருவள்ளூர், ஜூன் 12, 2017

[ எண் 8

வைகாசி 29, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு-2048

## உள்ளாட்சித் துறை அறிவிக்கை

திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-ன்கீழ் உருவாக்கப்பட்டுள்ள திடக்கழிவு மேலாண்மை துணை விதிகள் குறித்த அறிவிப்பு.

ஆவடி பெருநகராட்சி

(ந.க. எண். 9264/2015/எச்1, 12-4-2017)

நகர்மன்றத் தீர்மான எண். 94, நாள்.31.03.2017ல் அனுமதி அளித்துள்ளபடி

மத்திய அரசின் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 யினை, "அம்ருத்" நகரமாக தேர்வு செய்யப்பட்டுள்ள ஆவடி பெருநகராட்சி பகுதிகளில் அமல்படுத்த வேண்டியுள்ளதால், திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன் கீழ் ஆவடி பெருநகராட்சிக்கென துணை விதிகள் உருவாக்கம் செய்ய, நகரில் திடக்கழிவுகளை உற்பத்தி செய்யும் அனைத்து குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகங்களிடமிருந்து திடக்கழிவுகளை சேகரிக்கவும், உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லவும், மறு சுழற்சிக்கு பயன்படுபவைகளை பிரிக்கவும் மற்றும் உரம் தயாரித்தல் உள்ளிட்ட பணிகளை (Process) மேற்கொள்ள, சம்பந்தப்பட்ட குடியிருப்புகளிலிருந்து மற்றும் வணிக நிறுவனங்களிடமிருந்து சேவைக்கட்டணம் வசூல் செய்ய வேண்டியுள்ளது. எனவே, கீழ்க்கண்ட விபரப்படி சேவைக் கட்டணம் நிர்ணயம் செய்ய ஆவடி நகர்மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.



Scanned with CamScanner

சுற்றுப்புறச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986 (சட்ட எண்.29/1986)ல் பிரிவு 3, 6 மற்றும் 25களில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் மத்திய அரசு திடக்கழிவு மேலாண்மை பணிகளை முறைப்படுத்த திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ஐ இயற்றியுள்ளது. இந்த திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 அனைத்து நகராட்சிகளுக்கும் பொருந்தும். ஒவ்வொரு நகராட்சியும் தனது அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் நகராட்சி கழிவுகளை சேகரித்தல், சேமித்தல், தரம் பிரித்தல், எடுத்துச் செல்லுதல், செயலாக்கம் மற்றும் இறுதியாக்கம் செய்தல் போன்ற பணிக்கான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன் விதி 4 இல் குறிப்பிட்டுள்ளவாறு கழிவுகளை உருவாக்குபவர் அந்தந்த நகராட்சி நிர்வாகத்துடன் ஒருங்கிணைந்து கழிவுகளை கண்ட இடங்களில் கொட்டாமல் தவிர்க்கவும், கழிவுகளை தரம்பிரித்து நகராட்சியால் ஏற்படுத்தப்பட்டுள்ள முறைப்படி அப்புறப்படுத்தவும் பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 அத்தியாயம் VIII பிரிவு 153, 156, 157, 158, 160 மற்றும் 161ன்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் திடக்கழிவுகளை அகற்ற போதிய ஏற்பாடுகள் செய்யவும், திடக்கழிவு சேவையில் ஈடுபட்டு பொது சுகாதாரம் பேணி சுற்றுச்சுழலை பாதுகாக்கும் செலவினத்தை அதன் பொறுப்பாளர்களிடம் இருந்து சேவைக்கட்டணம் வசூலித்து செயல்படுத்தவும் நச்சுத் தன்மை உடைய கழிவுகளையோ, அழுகிய கழிவுகளையோ, மலக் கழிவுகளையோ, மருத்துவக் கழிவுகளையோ மாற்றம் செய்தல், சாலைகளில் போடுதல் மற்றும் பொது வடிகால்வாய்களில் கொட்டுதல் ஆகியவை தடை செய்யப்படுகிறது. மீறுவோர் மீது சட்டப்படி நடவடிக்கை மற்றும் அபராதம் விதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேற்காணும் சட்ட விதிமுறைகளுக்குட்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலைகள் சுத்தமாகவும், பொது வடிகால்வாய் தங்கு தடையின்றி செயல்படவும், நிலத்தடி நீர் மற்றும் சுற்றுப்புற காற்றின் தரம் ஆகியவை மாசுபடுவதை தவிர்க்கவும், பொது சுகாதாரம் பாதுகாக்கவும் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன்படி நகர்மன்றம் ஆணையாளருக்கு திடக்கழிவு மேலாண்மை திட்ட செயல்பாட்டிற்கு தனிநபர் குடியிருப்புகள் மற்றும் வணிகர்களிடம் இருந்து திடக்கழிவு மேலாண்மை சேவைக்கட்டணம் வசூலிக்கவும் துணை விதிகளின்படி நடவடிக்கை எடுக்கவும் அதிகாரம் வழங்கப்படும்.

1. ஆவடி பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட சாலைகள், தெருக்கள், சந்துக்கள், கடைவீதிகள், குடியிருப்புகள், தொகுப்பு வீடுகள், உணவகங்கள், அலுவலகங்கள், வணிகவளாகங்கள் மற்றும் இதர பிற இடங்களில் வசிக்கும் மக்கள் திடக்கழிவுகளை தெருக்களிலோ, சாலை ஓரங்களிலோ, சந்துக்களிலோ, கழிவுநீர்க் கால்வாய்களிலோ, பொது இடங்களிலோ மற்றும் நீர்நிலைகளிலோ போடக்கூடாது என்று தஸ்டவிதிக்கப்படுகிறது.

Scanned with CamScanner

180

2. மக்கள் வசிக்கும் மற்றும் கூடும் இடங்களில் உருவாகும் திடக்கழிவுகளை மக்கும் கழிவுகள், மக்காத கழிவுகள் மற்றும் வீட்டு அபாயகரமான கழிவுகள் என மூன்று பிரிவாக தனித்தனியாக சேகரம் செய்யப்பட வேண்டும். மக்கும் தன்மையுள்ள குப்பைகளை பச்சை நிறக் கூடையிலும், மக்காத தன்மையுள்ள குப்பைகளை வெள்ளை நிறமுள்ள கூடையிலும், அபாயகரமான வீட்டு குப்பைகளை கருப்பு நிற கூடையிலும் சேகரம் செய்யப்பட்ட வேண்டும். இது வீடு அல்லது நிறுவனத்தின் உரிமையாளர் அல்லது பொறுப்பாளரது கடமையாகும். கூடைகள் சொந்த செலவில் வாங்கி உபயோகிக்கப்பட வேண்டும்.

3. இவ்வாறு தரம் பிரித்து சேகரம் செய்யப்பட்ட குப்பைகளை நகராட்சி வாகனம் ஒவ்வொரு வீட்டிற்கும் குறிப்பிட்ட நேரத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளும், தனித்தனியாக பிரிக்கப்பட்ட இந்த குப்பைகளை நகராட்சி வாகனத்தின் பொறுப்பாளரிடம் நேரில் ஒப்படைப்பது / நகராட்சியால் அமைக்கப்பட்ட குப்பை தொட்டியில் சேர்ப்பது வீட்டின் அல்லது நிறுவனத்தின் உரிமையாளர் அல்லது பொறுப்பாளரது கடமையாகும். பிரிக்கப்படாத குப்பைகளை கண்டிப்பாக வாங்கப்பட மாட்டாது.

4. சுகாதாரக் கழிவுகளான இடைத்துணி, நாப்கின்கள் ஆகியவற்றினை உற்பத்தியாளர்களால் அதனுடன் வழங்கப்படுகின்ற உறையினுள்ளோ அல்லது பொருத்தமான பொருளால் வடிவமைக்கப்பட்ட உறைகளில் வைத்து மக்காத குப்பை சேகரிக்க வேண்டிய குப்பை தொட்டியில் தனித்தனியாக சேகரிக்க வேண்டும்.

5. அடுக்குமாடி குடியிருப்புகள், தொகுப்பு குடியிருப்புகள் மற்றும் இதர ஒன்றுக்கு மேற்பட்ட குடியிருப்புகள் உள்ள பகுதியில் உள்ள வீடுகளது அல்லது நிறுவனங்களது உரிமையாளர் மற்றும் அவர்களது பிரதிநிதிகள் நகராட்சியின் வாகனம் வரும்போது அவை நிறுத்தப்பட்டிருக்கும் இடத்தில் நேரில் கொண்டு வந்து ஒப்படைக்க வேண்டும். நகராட்சி பணியாளர்களால் மாடி ஏறி வந்து குப்பை பெற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

6. மீன், கோழி, ஆடு போன்ற இறைச்சி கடை நடத்துபவர்கள் கழிவுகளை தெருக்களிலோ அல்லது திறந்த வெளியிடங்களிலோ அல்லது கழிவு நீர்க் கால்வாய்களிலோ போடக்கூடாது. அவைகளை கசிவு ஏற்படாத வகையில் பொட்டலங்களாக்கி நகராட்சியின் வாகனத்தில் ஒப்படைக்க வேண்டும். இதற்காக பிளாஸ்டிக் பைகளை பயன்படுத்தக்கூடாது.



Scanned with CamScanner

7. மருத்துவமனை கழிவுகள், நோய் கிருமி சோதனை செய்யும் கூடங்கள் மற்றும் கால்நடை மருத்துவ கழிவுகளை எக்காரணம் கொண்டும், குப்பைகளில் சேர்க்க கூடாது. உயிரி மருத்துவக் கழிவுகள் மேலாண்மை விதிகள் 2016ல் கூறியுள்ளவாறு மருத்துவமனைகள் மற்றும் சோதனைச் சாலைகள் தங்களது சொந்த பொறுப்பில் உரிய முறையில் அகற்றி அழித்தல் வேண்டும். உயிரி மருத்துவ கழிவுகளை நகராட்சி பகுதியில் கொட்டுதல், புதைத்தல் மற்றும் எரித்தல் ஆகியவை தண்டனைக்குரிய குற்றமாகும்.

8. தோட்டக்கழிவுகள், பண்ணை கழிவுகள் ஆகியவற்றை உருவாக்கும் உரிமையாளர் அவற்றை தம் சொந்த பொறுப்பில் அப்புறப்படுத்த வேண்டும். நகராட்சி சாலை ஓரங்கள் மற்றும் பொது இடங்களில் கொட்டுவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

9. தெருவில் வியாபார செய்யும் ஒவ்வொருவரும் (Street vendor) அவரவர் வியாபாரம் செய்யும் போது உருவாகும் திடக்கழிவுகளை (உணவு கழிவுகள், ஒருமுறை பயன்படுத்தப்படும் தட்டு, குவளை, கொள்கலன்கள், தேங்காய் ஓடுகள், மூடு தாள்கள், காய்கறிகள், பழங்கள் முதலியன) பொருத்தமான போதிய கொள்கலன்களில் சேகரித்து நகராட்சியால் பராமரிக்கப்படும் குப்பை தொட்டி அல்லது நகராட்சி வாகனம் அல்லது நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடம் வழங்க வேண்டும்.

10. கட்டிட இடிபாடு கழிவுகளை கட்டிட உரிமையாளர் ஒப்பந்தக்காரர்கள் சாலைகளிலோ, தெருக்களிலோ போடக்கூடாது. அவ்வாறு போடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். அவைகளை சம்பந்தப்பட்டவர்கள் தங்களது சொந்த பொறுப்பில் கட்டுமானம் மற்றும் இடிபாடு கழிவுகள் விதிகள் 2016ன் படி அகற்றிக்கொள்ள வேண்டும் அல்லது உரிய சேவைக் கட்டணம் செலுத்தினால் நகராட்சி தனது வாகனம் மூலம் அவற்றை அப்புறப்படுத்தும்.

11. நகராட்சி எல்லைக்குள் பிளாஸ்டிக், ரப்பர், டயர் உள்ளிட்ட திடக்கழிவுகள் எவற்றையும் எரிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.

12. நூற்றுக்கும் மேற்பட்ட நபர்கள் கூடும் நிகழ்ச்சி மேற்கொள்ள 3 வேலை நாட்களுக்கு முன்னதாக நிகழ்ச்சி அமைப்பாளர் நகராட்சியில் அனுமதி பெற வேண்டும் மேலும், நிகழ்ச்சியின் போது உருவாகும் குப்பைகளை சம்பந்தப்பட்டவர்கள் பிரித்து சேகரம் செய்து தங்களது சொந்த பொறுப்பில் அகற்றிக்கொள்ள வேண்டும் அல்லது உரிய சேவைக்கட்டணம் செலுத்தினால் நகராட்சி தனது வாகனம் மூலம் அவற்றை அப்புறப்படுத்தும்.

Scanned with CamScanner

13. திருமண மண்டபங்கள், கோவில், சர்ச், மசூதிகள், சத்திரம் ஆகியவற்றில் நடைபெறும் திருமணம் மற்றும் இதர விசேஷங்களின் போது உருவாகும் கழிவுகளை தெருக்களிலோ, சாலைகளிலோ, கழிவு நீர் வாய்க்கால்களிலோ அல்லது வேறு எந்த பகுதிகளிலோ போடக்கூடாது. அவ்வாறு போடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். இவற்றை தமது சொந்த பொறுப்பில் வாகனம் மூலம் நகராட்சி உரக்கிடங்கில் ஒப்படைக்க வேண்டும் அல்லது உரிய நிர்ணயம் செய்யப்பட்ட சேவைக்கட்டணம் செலுத்தினால் நகராட்சி வாகனமே இவற்றினை பெற்றுக் கொள்ளும்.

14. நாள் ஒன்றிற்கு 100 கிலோ அல்லது அதற்கும் மேல் திடக்கழிவுகளை உருவாக்கும் நிறுவனங்கள், 5000 சதுரமீட்டருக்கு மேல் பரப்பளவு கொண்ட குடியிருப்புவளாகங்கள் மற்றும் அனைத்து விதமான நிறுவனங்களில் சேகரமாகும் குப்பைளை தரம் பிரித்து மறு சுழற்ச்சிக்கு தகுதியான குப்பைகளை நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடம் / மறு சுழற்சி செய்பவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். மக்கும் குப்பைகளை அந்தந்த நிறுவனங்களே தங்கள் வளாகத்திற்குள்ளேயே நகராட்சியின் வழிகாட்டுதலின் படி கழிவுகளின் தன்மை மற்றும் அளவிற்கேற்ப சரியான ஏற்புடைய நிலைத்து நீடித்து செயல்படுத்த தக்க வகையில் உரமாகவோ (composting) உயிரி எரிவாயுவாகவோ (Bio-methanation) மாற்றி அப்புறப்படுத்த தேவையான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த வேண்டும்.

15. உணவு விடுதிகள்,தேநீர் விடுதிகள், தள்ளுவண்டியிலுள்ள உணவுப் பொருள் விற்பனை நிலையங்கள், இரவு நேரக்கடைகள், காய்கறி மொத்த விற்பனை நிலையம், மார்க்கெட் ஆகியவற்றில் உருவாகும் குப்பைகளை தெருக்களிலோ சாலைகளிலோ,அல்லது நகராட்சியின் எந்த ஒரு பகுதியிலோ போடக்கூடாது. அவ்வாறு போடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். உரிய சேவைக்கட்டணம் செலுத்தினால் நகராட்சி வாகனமே இவற்றினை பெற்றுக் கொள்ளும்.

16. அச்சகங்கள்,தொழிற்சாலைகள் ரசாயன மருந்து கையாளும் தொழிற்சாலை மற்றும் இதில் குறிப்பிடாத இதர அனைத்து வணிக மற்றும் தொழில் நிறுவனங்களில் ஏற்படும் குப்பை கழிவுகளை நகராட்சி எல்லைக்குள் கொட்டக்கூடாது.

17. தோல்பதனிடும் தொழிற்சாலைக் கழிவுகளை நகராட்சி பகுதியில் விடக்கூடாது. கழிவுகளை அப்புறப்படுத்த மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் வகுத்துள்ள விதிமுறைகளின் படி அப்புறப்படுத்த வேண்டும்.

Scanned with CamScanner

18. பாதசாரிகள் மற்றும் சாலை ஓரங்களிலும் இதர இடங்களிலும் குடியிருப்போர் நகராட்சி சாலை ஓரங்களில் மற்றும் திறந்தவெளியில் மலம் மற்றும் சிறுநீர் கழித்தல் கூடாது.

19. செப்டிக் டேங்க் கழிவுகளை கழிவுநீர் வாய்க்கால்களிலோ,அல்லது தெருக்களிலோ கொட்டக்கூடாது. அவ்வாறு கொட்டுவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

20. திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 விதி எண் 4(3)ன் படி திடக்கழிவுகளை உருவாக்குபவர்கள் நகராட்சி குப்பை தொட்டிகளில் சேகரிக்க / நகராட்சியின் வாகனம் மூலம் குப்பை கழிவுகளை அப்புறப்படுத்த சேவைக்கட்டணங்கள் பின்வருமாறு நிர்ணயம் செய்யப்படுகிறது.

## அட்டவணை–1

| வ.எண். | விபரம் | காலம் | சேவைக் கட்டணம் (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1. | குடியிருப்புகள் | | |
| அ. | ரூ.300/– லிருந்து ரூ.500/– வரை சொத்து வரி (அரையாண்டு) விதிக்கப்பட்ட ஒவ்வொரு தனி குடியிருப்பிற்கும் | ஒவ்வொரு மாதத்திற்கும் | ரூ.20 |
| ஆ. | ரூ.501/– லிருந்து ரூ.1000/– வரை சொத்து வரி (அரையாண்டு) விதிக்கப்பட்ட ஒவ்வொரு தனி குடியிருப்பிற்கும் | ஒவ்வொரு மாதத்திற்கும் | ரூ.30 |
| இ. | ரூ.1001/– லிருந்து ரூ.2000/– வரை சொத்து வரி (அரையாண்டு) விதிக்கப்பட்ட ஒவ்வொரு தனி குடியிருப்பிற்கும் | ஒவ்வொரு மாதத்திற்கும் | ரூ.50 |
| ஈ. | ரூ.2001/– லிருந்து ரூ.5000/– வரை சொத்து வரி (அரையாண்டு) விதிக்கப்பட்ட ஒவ்வொரு தனி குடியிருப்பிற்கும் | ஒவ்வொரு மாதத்திற்கும் | ரூ.100 |
| 2. | கல்வி நிறுவனங்கள் | | |
| அ. | தனியார் பள்ளிகள் / கல்லூரிகள், விடுதிகள் மற்றும் தனியார் அலுவலக வளாகம் / தனியார் மருத்துவமனைகள் | ஒவ்வொரு மாதத்திற்கும் | ரூ.1000 |
| 3. | வணிக நிறுவனங்கள் | | |
| அ. | டீக்கடை / பெட்டிக்கடை (சிறியது) | ஒவ்வொரு மாதத்திற்கும் | ரூ.60 |
| ஆ. | நடமாடும் உணவகங்கள் (தள்ளுவண்டி) | ஒவ்வொரு நாளிற்கும் | ரூ.20 |
| இ. | உணவகங்கள் (சிறியது) | ஒவ்வொரு மாதத்திற்கும் | ரூ.120 |
| ஈ. | உணவகங்கள் / வணிக வளாகங்கள் / வணிக நிறுவனங்கள் (தினசரி 3 டன்னிற்கு குறைவாக கழிவுகள் உற்பத்தி செய்பவர்கள்) | ஒவ்வொரு நாளிற்கும் | ரூ.200 |
| உ. | உணவகங்கள் / வணிக வளாகங்கள் / வணிக நிறுவனங்கள் (தினசரி 3 டன்னிற்கும் அதிகமாக கழிவுகள் உற்பத்தி செய்பவர்கள்) | ஒவ்வொரு நாளிற்கும் | ரூ.500 |

Scanned with CamScanner

| | | | |
|---|---|---|---|
| ஊ. | திருமண மண்டபங்கள் / விழாக் கூடங்கள் | ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் | ரூ.1000 |
| எ. | ஆட்டிறைச்சிக் கடை / கோழியிறைச்சிக் கடை / மீன் கடை | ஒவ்வொரு மாதத்திற்கும் | ரூ.200 |
| ஏ. | மளிகைக் கடை / விற்பனைக் கடை (அனைத்து விதமான பொருட்கள்) | ஒவ்வொரு மாதத்திற்கும் | ரூ.200 |
| ஐ. | திரையரங்கம் / பொழுதுபோக்கு மையம் | ஒவ்வொரு மாதத்திற்கும் | ரூ.1500 |
| ஒ. | காய்கறி அங்காடி (ஒவ்வொரு கடைக்கும்) | ஒவ்வொரு நாளிற்கும் | ரூ.10 |
| ஓ. | ஆடறுப்பு நிலையம் | ஒவ்வொரு மாதத்திற்கும் | ரூ.600 |
| ஔ. | துணிக்கழிவுகள்/தோல் கழிவுகளை உருவாக்கும் தொழிற்சாலை | ஒவ்வொரு மாதத்திற்கும் | ரூ.1500 |
| ஃ. | சிறிய தொழிற்சாலைகள் | ஒவ்வொரு மாதத்திற்கும் | ரூ.1000 |
| 4. | <u>இதர கழிவுகளை அகற்றுதல்</u> | | |
| அ. | மரக் கழிவுகள் | ஒரு லோடிற்கு | ரூ.500 |
| ஆ. | தோட்டக்கழிவுகள் | ஒரு லோடிற்கு | ரூ.500 |
| இ. | கட்டிட இடிபாட்டு கழிவுகள் | ஒரு லோடிற்கு | ரூ.750 |

21. மேற்காணும் துணை விதிகளை மீறுபவர்கள் மீது தமிழ்நாடு 1920 நகராட்சிகள் சட்டம் பிரிவுகளின் கீழ் சட்டப்படியான நடவடிக்கை தொடரப்படும். மேலும் 1999 ஆம் ஆண்டு மத்திய அரசின் சுற்றுச் சூழல் பாதுகாப்பு சட்டம் பிரிவு 15–ன் படி ஆவடி பெருநகராட்சியின் சுற்றுச் சூழலுக்கு எதிரானதாக செயல்பட்டதாக கருதி உரிய நடவடிக்கை தொடரப்படும்.

22. துணை விதிகளின் குறிப்பிட்டுள்ள செய்யக்கூடாத செயலை செய்யும் நபருக்கு தண்டனையாக அட்டவணை IV-ல் கண்டவாறு அபராதம் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும்.

23. தொடர் குற்றங்களுக்கு கூடுதலாக தினசரி ரூ.100–வீதம் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும்.

24. மேலும் விதிகளில் கூறப்பட்டுள்ள நிர்வாக கட்டணங்களை விதித்தல், வசூல் செய்தல், அபராதக் கட்டணங்களை வசூல் செய்தல் மற்றும் அவற்றின் தொடர் நடவடிக்கை ஆகியவற்றிற்கு, நகராட்சியின் ஆணையாளருக்கு நகர்மன்றத்தால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

Scanned with CamScanner

# அட்டவணை–II

## மக்கும் கழிவுகள் மற்றும் மறுசுழற்சி கழிவுகள் விளக்கப் பட்டியல்

| உயிரி மக்கும் கழிவு | மறுசுழற்சி செய்யத்தக்க கழிவு |
| --- | --- |
| மக்கும் கழிவு என்பதன் பொருள் பொதுவாக நகராட்சி குப்பையில் காணப்படும் கழிவாகும். இதை ஈரக்கழிவு எனவும் அழைக்கப்படுகிறது. மக்கும் கழிவு முழுமையாக தாவரம் அல்லது விலங்கு மூலங்களிலிருந்து உருவாகும் ஒருவகை கழிவாகும். | மறு சுழற்சி செய்யத்தக்க கழிவு என்பது பொதுவாக நகராட்சி குப்பையில் காணப்படுவதாகும். இது உலர் கழிவு எனவும் அழைக்கப்படுகிறது. இதை ஒரு செயல் முறையில் புதிய பொருட்கள் உருவாக்குவதற்கு வேண்டிய மூலப் பொருட்களாக மாற்ற முடியும். புதிய அப்பொருட்கள் அசல் பொருட்கள் போல இருக்கலாம். அவ்வாறு இல்லாமலும் இருக்கலாம். |
| • டீ இலைகள், முட்டை ஓடுகள், பழம், காய்கறித் தோல்கள் மற்றும் பயன்படாதென விடுபவை உள்ளிட்ட சமையலறைக் கழிவுகள்<br>• இறைச்சி மற்றும் எலும்புகள்<br>• மலர்கள் உட்பட தோட்டக்குப்பை மற்றும் இலைக்குப்பை<br>• விலங்கு குப்பை<br>• பழுதடைந்த காகிதம்<br>• தேங்காய் ஓடு<br>• சாம்பல் | • செய்திதாள்கள்<br>• தாள், புத்தகம் மற்றும் இதழ்கள்<br>• கண்ணாடி<br>• உலோகப்பொருட்கள், கம்பி<br>• நெகிழி (Plastic)<br>• கந்தல் துணி<br>• தோல்<br>• ரெக்சின் (rexine)<br>• தொய்வை ( rubber)<br>• மரம் / அறைகலன்<br>• மூட்டை கட்டல் |

Scanned with CamScanner

# அட்டவணை–III

## வீட்டு அபாயகரமான கழிவு பட்டியல்

- ஏரோசல் டப்பா (Aerosol cans)
- மின்வெட்டொளி விளக்கின் மின்கலப்பெட்டியும் பட்டன் செல்லும்.
- நிறம் நீக்கி மற்றும் வீட்டு சமையலறையும், வடிகாலையும் தூய்மை செய்யும் பொருட்கள் இவற்றின் கொள்கலன்கள்.
- சீருந்து மின்கலப்பெட்டிகள், எண்ணெய் வடிகட்டிகள் மற்றும் சீருந்து பராமரிப்பு பொருட்கள் மற்றும் நுகர் பொருட்கள், வேதிய பொருட்கள் மற்றும் கரைப்பான்கள் இவற்றின் கொள்கலன்கள்.
- ஒப்பனை பொருட்கள் இராசாயன அடிப்படையிலான பூச்சிக்கொல்லிகள் மற்றும் இவற்றின் கொள்கலன்கள்.
- ஒளி விளக்குகள், குழாய் விளக்குகள் மற்றும் அடர்த்தியான ஒளிர் விளக்குகளை (CFL) வேண்டாமென்று விலக்கிய மருந்துகள் மற்றும் இவற்றின் கொள்கலன்கள்.
- வண்ணப்பூச்சு, எண்ணெய்கள், உயவுப் பொருட்கள் (lubricants) வஜ்ரபசைகள் (glues) நீர்மமாக்கிகள் (Thinners) மற்றும் இவற்றின் கொள்கலன்கள்.
- பூச்சிக்கொல்லிகள் மற்றும் கலைக் கொல்லிகள் அவற்றின் வெற்று கொள்கலன்கள்
- புகைப்பட ஆடியோ / வீடியோ நாடாக்கள் ( Tabers) மற்றும் இவற்றின் கொள்கலன்கள்.
- இராசாயனப் பொருட்கள் மெத்து (Styrofoam) மற்றும் அறைகலன்களை சிப்பம் கட்டும் மென்மையான மெத்துகள்
- மூட்டை கட்டும் கருவிகள், வெப்பமானிகள் மற்றும் பாதரசம் கொண்ட பொருட்கள்.
- தனியாள் கணினிகள், தொலைபேசிகள், எம்பி3 இயக்கிகள், ஆடியோ சாதனங்கள், தொலைக்காட்சி பெட்டிகள், கனிப்புப்பொறி, ஜி.பி.எஸ் (GPS) தானியங்கி மின்னணு, டிஜிட்டல் படி பெட்டிகள், தானாக ஒளியை இயக்கும் கருவிகளும் மற்றும் டிவிடி (DVD)கள், வி.சி.ஆர் (VCR) கள் அல்லது கேம்கோடா போன்ற வீடியோ ஊடகத்தைப்பயன்படுத்தி ஒளி இயக்கும் கருவிக்ள் மற்றும் பதிப்பான்கள் முதலிய மின்கழிவுகள்.

Scanned with CamScanner

## அட்டவணை–IV

### அபராதப் பட்டியல்

| வ.எண். | உப விதிகளுக்கான விளக்கம் | உபவிதிகளின்படி விதிக்கப்படவேண்டிய அபராதத் தொகை |
|---|---|---|
| 1. | பொது இடங்களிலோ / தனியார் இடங்களிலோ / கால்வாய்களிலோ குப்பைகளை கொட்டுதல் மற்றும் வாகனங்களிலிருந்து / கடைகளிலிருந்து / வணிக வளாகங்களிலிருந்து குப்பைகளை தூக்கி எறிதல் | ரூ.500/– |
| 2. | குப்பைகளை தரம் பிரிக்காமல் நகராட்சி வாகனத்தில் சேர்த்தால் | |
| | அ. தனி குடியிருப்பு | ரூ.500/– |
| | ஆ. ஒன்றுக்கு மேற்பட்ட குடியிருப்புகள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகள் | ரூ.5,000/– |
| | இ.மொத்தமாக குப்பைகளை உருவாக்குபவர்க | ரூ.10,000/– |
| 3. | தரம் பிரிக்கப்பட்ட நிலையில் கட்டிடக் கழிவுகளை ஒப்படைக்காதவர்கள் | ரூ.25,000/– |
| 4. | தோட்டக்கழிவுகள் மற்றும் மரக் கழிவுகளை முறையாக ஒப்படைக்காதவர்கள் | ரூ.500/– |
| 5. | குப்பைத் தொட்டிக்கு வெளியிலோ / அல்லது குப்பைத் தொட்டி இல்லாத இடத்திலோ குப்பைகளை கொட்டினால் | ரூ.1,000/– |
| 6. | குப்பைகளை எரித்தல் | |
| | அ. தமது குடியிருப்பில் குப்பைகளை எரித்தல் | ரூ.200/– |
| | ஆ. பொது இடத்தில் குப்பைகளை எரித்தல் | ரூ.50/– |
| | இ. கல்வி நிறுவனங்கள் / தனியார் நிறுவனங்களில் / தனியார் மருத்துவமனைகளில் குப்பைகளை எரித்தல் | ரூ.1,000/– |
| 7. | ஆட்டிறைச்சி /கோழியிறைச்சி மற்றும் மீன் கழிவுகளை உரிய முறையில் பிரித்து சேமித்து வைக்காமல் மற்றும் நகராட்சி வாகனத்தில் சேர்க்காது இருத்தல் | ரூ.5,000/– |
| 8. | குப்பை கூடை இல்லாத குப்பை பொறுக்கும் நபர் (Vendors/Hawkers) | ரூ.500/– |
| 9. | உரிய முறையில் தரம் பிரிக்காமல் மற்றும் குப்பைகளை ஒப்படைக்காத குப்பை பொறுக்கும் நபர் (Vendors/Hawkers) | ரூ.1000/– |
| 10. | பொதுக் கூட்டங்களின்/பொது நிகழ்ச்சிகளின் முடிவில் குப்பைகளை அகற்றி சுத்தம் செய்யாத தனியார்கள் | ரூ.25,000/– |

**இச்செயல்பாடுகள் அனைத்தும் 01–04–2017 முதல் அமுலுக்கு வருகிறது.**

ப.மு.நெ. முஜிபுர் ரஹமான்,
தனி அலுவலர் (ம) நகராட்சி ஆணையர்,
ஆவடி பெருநகராட்சி.

ஆவடி,
2017 மார்ச் 31.

(லேசர் அச்சடிப்புகள் மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் மாவட்டம்)
தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் புதுக்கோட்டை அரசு கிளை அச்சகத்தில் அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்பட்டது.

Scanned with CamScanner